Registered as News Paper        பக்கங்கள் 04        விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM        PEOPLES DAILY        மக்கள் நாளிதழ்

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஐப்பசி 17    (03 - 11 - 1991)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 258

## 1990 இல் தோற்றாதோருக்கு விசேட க.பொ.த (சா) பரீட்சை

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்றமுடியாத வடக்குக் கிழக்கு மாகாண மாணவர்களுக்கென பரீட்சைகள் ஆணையாளர் விசேட க.பொ.த. (சாதாரணம்) தரப் பரீட்சை ஒன்றை நடாத்துவார். 1991 ஆம் ஆண்டு க.பொ. த. (சாதாரணம்) தரப் பரீட்சையும் இவ்வருடம் டிசம்பர் மாதம் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும். 1991 ஆம் ஆண்டு க.பொ. த. (சா) தரப் பரீட்சையும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடாத்தப்படும். இவை தொடர்பான நடவடிக்கைகளுக்காக இதற்கென [ 4 ஆம் பக்கம் பார்க்க [

## ரோகணாவை கொல்லலாம் எனில் பிரபாகரனுடன் ஏன் பேசவேண்டும்?

- காமினி

ஜே.வி.பி தலைவர் விஜே வீரவை சுட்டுக் கொல்ல முடியுமானால் ஏன் பிரபாகரனை மாத்திரம் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்? இவ்வாறு ஐ.தே. கட்சி அதிருப்தியாளர்களில் ஒருவரான காமினி திசநாயக்கா கேள்வி எழுப்பினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாவில் அதிருப்தியாளர்கள் நடத்திய கூட்டத்திலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் பேசுகையில் இன்று இந்நாட்டில் பிள்ளைகள் வெளியே சென்றால் வீடு வந்து சேரும்வரை பெற்றோர்கள் நம்பிக்கையில்லாமல் காத்துக்கிடக்க வேண்டியுள்ளது என்றார்.

ஜெயவர்த்தனா யுகத்தில் நாட்டின் அபிவிருத்தியைத்தான் முக்கியமாகக் கொண்டு செயற்பட்டேன். நான் மகாவலி அமைச்சராக இருந்த போது 150 வாகனங்களை பாதுகாப்பு படைகளுக்குக் கொடுத்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய முன்னணி அமைச்சர் பிரேமச்சந்திரா இன்றைய ஜனாதிபதிக்கு துணிவு இருந்தால் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற பிரதேச சபை ஒன்றை கலைத்து மீண்டும் தேர்தலை நடத்தட்டும். அத் தேர்தலில் எங்களது செல்வாக்கை எடுத்துக் காட்டுகிறோம் என்றார்.

லலித் பேசுகையில் இன்று இந்த அரசாங்க தலைவரின் கொள்கை பிடிக்காமல் படித்த புத்திசாலி மந்திரிகள் விலகிவிட்டோம் என்றார்.

## நவம்பர் 06 அதிகாலையில் புதிய கட்சி உதயமாகும்?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய ஜனநாயகக் கட்சி என்ற பெயரிலேயே காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி குழுவினரின் கட்சி அமைக்கப்படவுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப்புதியகட்சி நவம்பர் 6 ஆம் திகதி அதிகாலை 4 44 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆரம்ப வைபவத்திற்கு பூட்டான் மன்னர் வரார்

வியாழனன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் 6 ஆவது சார்க் உச்சி மாநாட்டின் ஆரம்பவைபவத்தில் பூட்டான் அரசர் கலந்து கொள்ளமாட்டார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோன் நேற்றுக் கொழும்பில் இத்தகவலை வெளியிட்டார்.

முக்கிய பணிகள் காரணமாக அவர் மேற்படி வைபவத்தில் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலவச இணைப்பு

1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## யாழ். அரச அதிபர் அழைப்பு செயலகத்தில் இன்று கூட்டம்

## இராணுவ தலைமை மாற்றம்

# ஆட்சியைப் பலப்படுத்த பிரேமதாசா முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ தலைமைப்பீடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கையை வலுப்படுத்தியுள்ளதாக கொழும்பு அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தனக்கு நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை கூட்டுப்படைகளின் தளபதியாக நியமித்ததன் மூலம் ஆயுதப்படைகளை தனது கட்டுப்பாட்டின்கீழ் ஜனாதிபதி பிரேமதாசா கொண்டுவந்துள்ளதாக இந்த அவதானிகள் தெரிவித்தனர்.

லெப். ஜெனரல் ஹமில்டன் ஜனாதிபதிக்கு மிகவும் வேண்டியவர். சமீபத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின்போது ஜனாதிபதிக்கு மிகவும் விசுவாசமாக செயற்பட்டவர். இந்த அரசியல் நெருக்கடி காரணமாக இராணுவ அமைப்பில் குழப்பம் ஏற்படாது பிரேமதாசாவுக்கு பக்கபலமாக நின்றவர். இதன் காரணமாகவே இவருக்கு கூட்டுப்படைகளின் நடவடிக்கைகளுக்கான தளபதியாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. பிரேமதாசாவுக்கு உறவினரான ஜெனரல் சிறில்ரணதுங்கா பாதுகாப்பு செயலாளராகவும், ஹமில்டன் கூட்டுப்படை தளபதியாகவும் செயல்படுமிடத்து ஆயுதப் படைகளை தமது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் ஜனாதிபதி வைத்துக்கொள்ளலாமென விசயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கி, பிரேமதாசாவுக்கு கைகொடுத்த மேஜர் ஜென (4 ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் பொதுதேர்தல்?

## பூட்டான் மன்னர் வரார்

வியாழனன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் 6 ஆவது சார்க் உச்சி மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் பூட்டான் அரசர் கலந்து கொள்ளமாட்டார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோன் நேற்றுக் கொழும்பில் இத்தகவலை வெளியிட்டார்.

முக்கிய பணிகள் காரணமாக அவர் மேற்படி வைபவத்தில் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சார்க் பிரதிநிதிகளுக்கு வைத்திய வசதி ஒழுங்கு

(கொழும்பு)

கொழும்பில் ஏழாந்திகதி தொடங்கும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள வரும் பிரதிநிதிகளின் அவசர வைத்திய தேவைக்கென கொழும்பு பெரியாஸ்பத்திரியில் உள்ள பணம் செலுத்தி சிகிச்சை பெறும் வார்ட்டுகளின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

சார்க் மாநாடு ஆரம்பமாகி முடியும் வரை மேற்படி வைத்தியசாலையில் உள்ள சகல வைத்திய நிபுணர்களும் கடமையிலீடுபடுவர்.

### எதிர்ப்பு மனுவிற்கு

## ஐ.தே.கட்சி அதிருப்தியாளர் பதில் மனுத் தாக்கல்

செயலாற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைப்பு முறை அரசாங்கத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தால் இந்த அமைப்பு முறையிலான அரசாங்கம் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்பதையோ அல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

...டியவர். சமீபத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின்போது ஜனாதிபதிக்கு மிகவும் விசுவாசமாக செயற்பட்டவர். இந்த அரசியல் நெருக்கடி காரணமாக ... வுக்கு பக்கபலமாக நின்றவர். இதன் காரணமாகவே இவருக்கு கூட்டுப்படைகளின் நடவடிக்கைகளுக்கான தளபதியாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. பிரேமதாசா ... செயலாளராகவும், ஹமில்டன் கூட்டுப்படை தளபதியாகவும் செயல்படுமிடத்து ஆயுதப்படைகளை தமது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் ஜனாதிபதி வைத்துக்கொள்ளலாமென ...

இதற்கிடையில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கி, பிரேமதாசாவுக்கு கைகொடுத்த மேஜர் ஜென

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அரச அதிபர் அழைப்பு செயலகத்தில் இன்று கூட்டம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்களையும், அவர்கள் மட்டத்திலுள்ள பாவனையாளர் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்களையும் இன்று காலை பதினொரு மணிக்கு யாழ்ப்பாணம் செயலகத்தில் வந்து சந்திக்கும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் விசேட அறிவித்தலை விடுத்துள்ளார்.

இவ்வறிவித்தலில் மேலும் தென்மராட்சியிலுள்ள அரசாங்க அதிபர்களை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கும், வடமராட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இசையருவி ஒலி நாடா இன்று வெளியீடு

தாயக விடுதலைப் பாடல்களில் பத்துப் பாடல்கள் நம் நாட்டு நாதஸ்வர இசையுடன் இணைந்து தவில், மிருதங்கம், தபேலா, வயலின் மற்றும் மேற்கத்தைய இசைக் கருவிகளையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் 'இசையருவி' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவம் இன்று மாலை நடைபெறும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்திற்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் பொது தேர்தல்?

## அரசியல் அவதானிகள் ஆருடம்

சார்க் உச்சி மாநாட்டின் பிறகு பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படலாம் என்று நேற்று இரவு பி.பி.ஸி. கருத்து வெளியிட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாம். அத்துடன் வரும் வரவு செலவுத் திட்டத்தில் தேர்தல் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட மேலதிக மான நிதியையும் காரணம் காட்டி, இவை தேர்தலுக்கான முன்னோடி நடவடிக்கைகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## அநுராவின் நியமனங்கள் கட்சியைப் பிளவுபடுத்தலாம்

### - பி.பி.ஸி.கருத்து

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் தற்போதைய கட்சிச் செயலாளரான அநுரா பண்டாரநாயக்கா இளைஞர் குழுக்களுக்குத் தமது ஆதரவாளர்களை நியமித்துள்ளார்.

திரு அநுராவின் இந்நடவடிக்கை கட்சியினுள் பலத்த மனக்கசப்பைத் தோற்றுவிக்க கூடும் எனவும், இதனால் திருமதி சிறிமாவோ நாடு திரும்பியபின் இடதுசாரிகளுடன் இணைந்து புதிய கட்சியைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை ஏற்படலாமென்றும் நேற்றிரவு பி.பி.ஸியின் சிங்கள ஒலிபரப்பில் கருத்து வெளியிடப்பட்டது.

## 'யுக்திய' பத்திரிகைக்கு சீல் ஊழியர்கள் கைது

யுக்திய என்ற சிங்களப் பத்திரிகையின் காரியாலயம் கல்கிஸையில் பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

யுக்திய பத்திரிகையை அச்சிடும் 'நவமங்க' என்ற அச்சகமும் சீலிடப்பட்டது.

ஐக்கியதேசியகட்சி அதிருப்தியாளர் ஆதரவானஇப்பத்திரிகைக் காரியாலயத்தில் 'களினோ ராஜா' எனப்படும் ஜோ சிம்சதா பிரேமதாஸ தடைய' என்ற சிங்களப் புத்தகத்தின் பிரதிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கடந்த மாதம் 14 ஆம் திகதி காரியாலயமும் அச்சு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டில்லியில் டிக்சிற்றின் பதவியுயர்வு

# பிரேமா அரசுக்கு புதிய தலைவலி

(கொழும்பு)

மிகவும் சர்ச்சைக்குரிய ராஜதந்திரியான திரு ஜே. என். டிக்சிற் இம்மாதம் 10 ஆம் திகதியிலிருந்து இந்திய வெளியுறவுச் செயலாளராக பதவியேற்பது சிறிலங்கா - இந்திய உறவில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தலாமென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. 1987 ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டின் பிரதான சூத்திரதாரியாக இருந்த திரு டிக்சிற் வெளிவிவகார அமைச்சில உயர்பதவி ஏற்பது பிரேமதாசா அரசுக்கு புதிய சிக்கலை ஏற்படுத்தலாமென இவ் வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்திய - இலங்கை உடன்பாட்டை நடைமுறைப்படுத்த தவறியதோடு புலிகளோடு சேர்ந்து இந்திய சமாதானப் படையையும் வெளியேற்றியது காரணமாக பிரேமதாசா மீது டிக்சிற் அதிருப்தி கொண்டிருந்தார். இந்நிலையில் மீண்டும் இலங்கை விவகாரத்தில் செல்வாக்குச்செலுத்தக்கூடிய முக்கிய பதவியை ஏற்கப் போகும் டிக்சிற் மீண்டும் இந்திய - இலங்கை உடன்பாட்டை புதுப்பிக்க முயற்சிகளை எடுக்கலாமென்றும் இதனால் இலங்கை - இந்திய உறவுகளில் புதிய சிக்கல்கள் உருவாகக் கூடுமென கொழும்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது

# மாவீரர்கள் புதைக்கப்படவில்லை மனங்களில் விதைக்கப்பட்டனர்

(நமது நிருபர்)

மாவீரர்கள் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் அல்ல, இவர்கள் மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டவர்களாவர். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் நம்பிக்கைக்கும் மென்மேலும் உந்து சக்தியாக இருப்பவர்கள் இந்த மண்ணின் மீட்புக்காக போராடி மறைந்த மாவீரர்கள் தான் இவ்வாறு தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பில் மேலும் தேசப்பற்றுடன், தேசத்திற்காக வாழ்ந்து பல பணிகளை புரிந்து தேசவிடுதலைக்காகப் போராடி மறைந்தவர்களான இவர்கள் தேச வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

27 - 06 - 1966

❀ ❀

ஈழ மண்ணில்

14 - 11 - 1990

திதி: 03-11-1991

**வீரவேங்கை கண்ணன் (செல்வம்)**

**நாராயணசாமி செல்வக்கிருஷ்ணன்**

ஆண்டொன்று சென்றாலும் எம் அரவணைப்பில்
அருகிலேயே நிற்கின்றாய் எம் செல்வமே
நீர் எங்கு சென்றாலும் எம் நினைவுகள்
உம்மீது தொடர்ந்தே செல்கின்றது அன்பே.
இறந்தும் இறவாது எங்கள் மனதிலே வாழும்
எம் செல்வமே

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம். பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்,

(R/1893)

## 1-ம் ஆண்டு வீர அஞ்சலி



பிறந்த திகதி
25-09-1970

வீரமரணம்
03-11-1990

**2வது லெப்டினன்ட் அன்றூ**

**(நாகமுத்து திரவியநாதன்)**

புன்னாலைக் கட்டுவன் தெற்கு
எதிரியின் எண்ணத்தை அடியோடு உடைத்திட,
இறுதிவரை உறுதியோடு களத்தினில் சமராடினாய்.

## தபால்கள் தேக்கம்

(சுச்சமோட்டை)

யாழ். பிரதம தபாலகத்தில் கிளிநொச்சி, மன்னார், பூநகரி, முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகளுக்கான தபால்கள் கடந்த 2 வாரங்களாக தேங்கிக் கிடப்பதாக தபாலக வட்டாரம் தெரிவித்தது. தற்போதைய போக்குவரத்து சிரமமைமயால் அங்குள்ள தபாலக ஊழியர்கள் தபால்களை எடுத்துச் செல்லாததனால் தான் தபால்கள் தேங்கிக் கிடப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது

## வரி விளம்பரம்

அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரால் நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, பீனிசம், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. மேலதிக விபரங்களுக்கு 121/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், 95, யாழ் வீதி, மானிப்பாய், திருமதி சத்தியமூர்த்தி, புகையிரதவீதி கொக்குவில். (R/1896)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில்
28
-
02
-
1975



மண்மீட்பு பணியில்
03
-
11
-
1990

**வீரவேங்கை டில்லி**

**(தேவதாஸ்-சாம்சன்)**

நாடு நமது எம் அடிமைத் தளையை
கனையப் புகுந்த வேங்கையே - நல்
ஏடும் எழுத்தும் இதய மலராய்
ஏற்றிப் பசுமும் டில்லியே - நாம்
பாடும் பரணி பாடி ஓடும்
நாளும் கூடும் நாளிதே - முல்லை
வீடு தோறும் உந்தன்வீரம்
வெற்றி கூறும் வேங்கை நீ!
சாடும் கூற்றமென்ன முழங்கி
தரணி காத்த மேஜர் தம்பேன்
சீறி முழங்கும் சிறிய தந்தை
என்ன நாடு அறியுமே!

நன்றியுடன்

இல 335/4
4ம் கண்டம்
வலதுகரை
அறிவியல் நகர்
செல்வேயிஸ் லேன், பண்டத்தரிப்பு.

அம்மா, அப்பா, சின்னமாமா
அண்ணா, தங்கை
உறவினர்

(R/1879)

## இருநாட்கள் மட்டுமே நரசிம்மராவ் தங்குவாராம்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் வேண்டுகோளை அடுத்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் 'சார்க்' உச்சிமாநாட்டின் முதல் இரு தினங்களிலும் கலந்துகொள்வார் எனகொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நரசிம்மராவ் நவம்பர் 7 ஆம் திகதி மாலை வந்து 'சார்க்' மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்ட பின்னர் 8 ஆம் திகதி மாலை இந்தியா திரும்புவார் என்றும் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளிலும் இவர் கலந்து கொள்வார் என்றும், இறுதி நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளமாட்டார் என்றும் கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தியத் தரப்பில் இது குறித்து எந்தவிதத் தகவலும் இதுவரை தெரிவிக்கப் படவில்லை.

முன்னதாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் சிறிலங்காவில் குறுகிய நேரமே தங்கியிருப்பார் என்று இந்தியப் பத்திரிகைகள் குறிப்பிட்டது தெரிந்ததே.

## குமணவில் வவுச்சர்கள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறையை வந்தடைந்திருக்கும் 'குமண' கப்பலில் ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பி வைக்கப் படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக அக்டோபர் மாதத்திற்கான ஓய்வூதியக்கொடுப்பனவு தாமதமடையலாம் என்று கூறப்பட்டது.

(தி)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 03



லெப். ஜஸ்ரின்



லெப்.
காஞ்சனா



கப்டன்
அருந்ததி

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பொன்னாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

2 ஆம் லெப். சுகன் (மாரி சக்திவேல் - வாமதேவபுரம், அடம்பன்)

2 ஆம் லெப். குட்டி (மகாலிங்கம் ஜெயவர்த்தனா - ஜெயவர்த்தனா வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

றூபி (மரியம்மா - மரிமுத்து முதலியார்சமம் இலுப்பைக்கடவை, மன்னார்)

பலாண்டாலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில்



## 2வது லெப்டினன்ட் அன்றா
(நாகமுத்து திரவியநாதன்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு

எதிரியின் எண்ணத்தை அடியோடு உடைத்திட,
இறுதிவரை உறுதியோடு களத்தினில் சமராடினாய்.
விடுதலை வானில் தமிழர் விருப்புடன் சிறகடிக்க
விடுதலைப் போர்செய்து வீரமரணம் கண்டாய்.
சரித்திரம் உன்தலை சாகத்தான் விட்டிடுமோ,
தன்குமுறலை ஆக்கியுன்னை தரித்துநிற்கச்செய்திடுமே
உன்மேன்மை இவ்வுலகம் என்றென்றும் பேசும்
தலைவன்கொள்ளாவுன் தகைமையைச்சொல்லும் உன்
ஓராண்டு பூர்த்திக்கு தருகிறோ மெமது அஞ்சலியை,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

(B/3418) குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
27-05-1974

வீரமரணம்
17-10-1990

திதி 04-11-1991

### வீரவேங்கை நசார்
(விஜயரட்டிணம் சுதாகரன்)

நீ ஓர் இலட்சியத்துக்காக வாழ்ந்தாய்
ஆனால்! அது நிறை வேறுமுன் மாண்டாய்
நீ எம் மண்ணில் வாழ்ந்தது சிலகாலம்
ஆனாலும் நீ ஓர் அழியா ஓவியம்
சுதா நீ சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க நினைத்தாய்.
அது உன் சுவாசத்தையே நிறுத்தி விட்டது
ஆனாலும் நீ ஓர் காவியமாகி விட்டாய்
இனி உன் வரலாறு புகழ்பாடும்

சுதாகரன் வீதி, பெரிய விளான். | உன்பிரிவை நினைந்து வாடும் அம்மா தம்பி அப்பம்மா உறவினர்.

(B/3426)

சாடும் கூற்றமென்ன முழங்கி
தரணி காத்த மேஜர் தங்கேஸ்
சீறி முழங்கும் சிறிய தந்தை
என்ன நாடு அறியுமே!

நன்றியுடன்

இல 335/4
4ம் கண்டம்
வலதுக்கரை
கற்சிலைமடு.

அம்மா, அப்பா, சின்னமாமா
அண்ணா, தங்கை
உறவினர்

செல்வேலீஸ் ஜேன், பண்டத்தரிப்பு.

(R/1879)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25
—
06
—
1931



மறைவு
19
—
10
—
1987

### திரு. சுப்பையா நவரட்ணம்
(பாப்பா)

(ஓய்வு பெற்ற சிறாப்பர், நீர்ப்பாசன இலாகா, கல்முனை)

திதி: 3 - 11 - 1991

அப்பா என்று அன்பை பொழிந்தீர் இன்பம் கண்டோம்
ஆனால் அமரர் ஆகி ஆழ்ந்த துன்பம் தந்தீரே
இகமதில் இதுவல்லோ இல்லறம் என வாழ்ந்தோம்
ஈற்றில் ஈடில்லா துயரத்தில் ஆழவிட்டீரே
உலகு புகழ் கீர்த்தி பெற்றிடவைத்த அப்பா
ஊரில் சுற்றம் புடைசூழ துயர்பட விட்டீரே,
எவரும் உமக்கு ஈடாகுமா எமக்கு இவ்வுலகில்
ஏங்குகின்றோம், வாடுகின்றோம். பிரிந்ததும் ஏன் அப்பா,
ஐயகோ என ஓலமிட்டு அழுதழுதாலும்
ஒன்றல்ல பல கனவுகளில் நீர் காட்சி தந்தாலும்
ஓடி வர முடியவில்லை, காலம் இன்னும் வரவில்லை
ஔவியமாக உம்முடன் வாழ்ந்தது உண்மைதானே
ஃகவே எப்போது எம்மை ஏற்றிடுவீர் எமதருமை அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

165, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், உற்றார்
உறவினர்கள்

(R/1887)

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பொன்னாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

2 ஆம் லெப். சுகன் (மாரி சக்திவேல் - வாமதேவபுரம், அடம்பன்)

2 ஆம் லெப். குட்டி (மகாலிங்கம் ஜெயவர்த்தனா - ஜெயவர்த்தனா வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

றூபி (மாரியம்மா - மாரிமுத்து முதலியார்கமம் இலுப்பைக்கடவை, மன்னார்)

கொண்டாவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரமரண மெய்திய

சபரி (ஹம்சா ஆத்துமிதானந்தன் - 214/5 இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு)

மட்டக்களப்பு, கல்லடிப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வாலைக்கொடிச் சேனைப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரமரண மெய்திய

லெப். ஜஸ்ரின் (அந்தோனி - ஆரோக்கியநாதன் வீச்சுக் கல்முனை)

யாழ்ப்பாணம் சரசாலைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் சுந்தரம்

1990 ஆம் ஆண்டு யாழ். தச்சன்காடு பகுதியில் சிறிலங்காப்படையினரின் மினிமுகாம் மீதான தாக்குதலின்போது வீரமரண மெய்திய

கப்டன் அருந்ததி (செரஞ்சனி சண்முகநாதன் - அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

லெப். காஞ்சனா (சரோஜினி கணபதிப்பிள்ளை - காந்தி வீதி, கல்வெட்டித்துறை)

ராஜன் (ஜோசப் ராஜேந்திரன் - பாடுமீன் வீதி. மட்டக்களப்பு)

லெப். மரிக்கார் (செல்வமாணிக்கம் ரதீஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி)

2 ஆம் லெப் அன்றா (நாகமுத்து - திரவியநாதன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்)

2 ஆம் லெப். ரோம் (முத்துலிங்கம் - கிருஷ்ணமூர்த்தி சாவகச்சேரி)

சேகர் (வித்தியானந்தன் அன்புக்குமாரன் - இணுவில் கிழக்கு)

ஈசன் (சுப்பிரமணியம் சங்கர் - ஆரியாலை கிழக்கு)

பாஞ்சாலன் (சற்குணம் மாதவன் - கரணவாய் கிழக்கு, கரவெட்டி)

கார்த்திக் (சிதம்பரநாதன் கோணேஸ்வரன் - பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு)

டில்லி (தேவதாஸ் சாம்சன் - 335/4, 4-ம் கண்டம், வலதுகரை கற்சிலைமடு)

கீர்த்தி (தம்பிப்பிள்ளை - சங்கரன் செங்கலடி, மட்டக்களப்பு)

சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

சுனில் (அருமைநாயகம் - கோளாவில் அக்கரைப்பற்று)

ராஜன் (கார்த்திகேசு ரவி - கஞ்சிகுடிச்சாறு மட்டக்களப்பு

2 ஆம் லெப் கோணேஸ் (யோகராசா - நிலாவெளி, திருமலை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3425)

# மட்றிட்டில் அரபுக்களையும் - யூதர்களையும் ஒன்று கூட்டியதுமட்டுமே மாநாட்டின் வெற்றி

மட்றிட்டில் நடந்த மத்திய கிழக்கு நெருக்கடிக்கான சமாதான மாநாடு நேற்று முன்தினம் முடிவடைந்தது. மட்றிட் மாநாடு வெற்றியில் முடிவடைந்ததா? தோல்வியில்முடிவடைந்ததா? என்றால், எதிர்கால திட்டம் ஒன்றும் இல்லாமல் முடிவடைந்தமையால் தோல்வியில் முடிவடைந்தது என்றே சொல்லவேண்டும்.

இதேவேளை 43 வருடங்களுக்கு மேலாகப் புரையோடிப்போயுள்ள மத்திய கிழக்கு நெருக்கடிக்கு மூன்று நாள் மட்றிட் மாநாட்டில் தீர்வு காணப்படும் நிலையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை சற்று ஒதுக்கிவைத்து விட்டு அரபுக்களின் ஆளும் வர்க்கங்களுடன் சில உடன்பாடுகளை மத்திய கிழக்குத் தொடர்பாக உருவாக்கி விடலாம் என அமெரிக்கா எண்ணியது.

இதேவேளை இஸ்ரேல் சமாதான மாநாட்டிற்கு சற்று முரண்டு பிடித்த போது உதவிகளை நிறுத்தப்போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மிரட்டினார். சில உதவிகளை இடைநிறுத்தியுமிருந்தார். ஆனால் அமெரிக்கா சமாதான மாநாட்டில் இஸ்ரேலின் நலன்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொண்டதோடு பெருமளவு இஸ்ரேலின் நிபந்தனைகளையும் நிறைவேற்றி வைத்தது என்றே சொல்லலாம். சமாதான மாநாடு தொடர்பாக இஸ்ரேல் இருநிபந்தனைகளை முன் வைத்திருந்தது.

நாடாக இருப்பினும், அது ஓர் சமாதான, சுமுகமான சூழ்நிலையில் இடம் பெறும் என ஆரம்பத்தில் இருந்தே எதிர்பார்க்கப்படவில்லை. 43 வருடங்கள் முரண்பட்ட சக்திகளாக மூன்று போர்களையும், இழப்புகளையும் சந்தித்தவர்கள் கூடும்போது சுமுகமான ஒரு சூழ்நிலையை எதிர்பார்க்க முடியாதுதான். இதனால் ஆரம்பத்திலேயே மாநாட்டு மண்டபமேசை இஸ்ரேல்அரபு பிரதிநிதிகள் ஒருவரைஒருவர் நேரகப் பார்த்துக்கொள்வதைத்தவிர்ப்பதற்காகஆங்கில எழுத்துவடிவில் அமைக்கப் பட்டிருந்தது. இதன் அவசியத்தை வலியுறுத்துமாப்போல் இஸ்ரேல் பிரதிநிதிகள் குழுவிற்கு சிரியாத் தூதுக்குழுவினர் கைகுலுக்க மறுத்து விட்டனர். இவ்வாறான தொரு சுமுகநிலை யற்ற நிலையிலேயே சமாதான மாநாடு ஆரம்பமானது.

பிரதேசத்தில் யூதக்குடியேற்றங்கள் செய்யப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும் எனக் கோரினர்.

இறுதி நாள் நிகழ்ச்சியில் பேசிய பாலஸ்தீனப் பிரதிநிதி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் உடனடியாக அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகியநாடுகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் எனக்கோரினார்.

ஆனால் மூன்று நாட்கள் நடைபெற்ற இச்சமாதான மாநாடு எதிர்பார்த்ததுபோலவே முன்னேற்றம் எதுவும் இன்றி முடிவடைந்தது. அடுத்த சந்திப்பு எங்கே, எப்போது என்ற தீர்மானம் எடுக்கும் அளவிற்குக்கூட மாநாட்டில் முடிவு எடுக்க முடியாமல் இருந்தது. அடுத்த சந்திப்பை அடுத்த ஒரு வாரத்திற்குள் நடத்தத் திட்டமிட்டிருந்த அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் மீண்டும் தனது முயற்சியை ஆரம்பித்துள்ளார்.

ஜெயராஜ்

க்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்-புஷ் கடந்தகால வரலாற்றை மறக்காதுவிட்டால் எதிர்கால சந்ததியும் அமைதியாக, நிம்மதியாக வாழ முடியாதுஎன்றார். அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் மாநாட்டின் இறுதியில் நிகழ்த்திய உரையில் தேவையற்ற விடயங்களைப் பேசுவதைவிடுத்து அரசியல் தீர்வு குறித்த விடயங்களை நம்புமையுடனும் விட்டுக் கொடுப்புகளுடனும் பேசமுன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஒட்டு மொத்தமாக நோக்கின் மற்றிட்டில் நடைபெற்ற மத்தியகிழக்கு சமாதான மாநாடு 43 வருடங்களாக முரண்பட்டுக்கிடந்தவர்களை ஒரு மண்டபத்தில் கூடியதாகவே முடிந்தது. ஆனால் அவர்கள் மண்டபத்தினுள்ளும் தமது பகைமையை மறக்கவில்லை அவர்கள் கைகுலுக்கிக் கொள்ளவோ அன்றி நேருக்குநேர் உரையாடிக் கொள்ளவோ கூட அம்மா

டமைச்சர் பேச்சால் இஸ்ரேலியப் பிரதமர் சினமடைந்தார். அவருடைய முகம் சின கடுப்பானதாக மாறியது. அதாவது பேச்சுவார்த்தை அமெரிக்காவின் வற்புறுத்தலினால் இஸ்ரேல் அரபு ஆகிய இருபகுதியினரும் மட்றிட் வந்து வரிசையாக அமர்ந்திருந்தனர்என்பதே உண்மை. இதனை பாலஸ்தீனப் பிரதிநிதி கைதர் அப்துல்அலி மாநாட்டின் இறுதிநாள் பேச்சில் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார். அவர் தனது உரையில் நாங்கள் சித்திரவதை செய்யப்படும் நாட்டில்



இருந்து வந்திருக்கின்றோம். சிறைப்பட்டிருக்கும் போதிலும் பெருமையுடைய மக்களாகவே வாழ்கிறோம். இன்று எமது நாட்டின் ஆக்கிரமிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி கேட்கப்பட்டிருக்கின்றோம் என்றார். பாலஸ்தீனப்பிரதிநிதியின் இக்கூற்றே மட்றிட் மாநாட்டின் உண்மை நிலையாகும். அமெரிக்கா மாநாட்டை ஓர் சமாதான சுமுக சூழ்நிலையில் கூட்டவில்லை. இதனால்மாநாடு அடுத்தகட்ட நடவடிக்கை என்ற கேள்வியுடன் முடிவடைந்துள்ளது.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் தனது என இஸ்ரேல் வாதிக்கும் வரை அமெரிக்கா அதனை மறுக்காதவரை இதேபோல் எத்தனை சமாதான மாநாடு கூட்டப்படினும் மத்திய கிழக்கில் சமாதானம் பிறக்கப் போவதில்லை என்பது மட்டும் தெளிவு.

> இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதியை மீட்பதில் மட்டும் அரபு எதிரிகள் கவனம் செலுத்துவார்களேயானால் மாநாட்டில் எந்தப்பயனும் இருக்கப்போவதில்லை.
>
> — இர்சாத் சமீர்

வரும் என எவரும் எதிர்பார்க்கவில்லைத்தான். இதனை அமெரிக்க ஜனாதிபதி மட்றிட் மாநாட்டிற்கு புறப்பட்ட வேளையில் வஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசும் போதே தெரிவித்தும் இருந்தார். மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் மிகச் சிக்கலான பிரச்சினைக்கு இப்பேச்சுவார்த்தைகள் உடனடியான தீர்வு எதுவும் தரும் என எவரும் எதிர்பார்க்க வேண்டாம் எனக் குறிப்பிட்டார். அதேவேளை மத்திய கிழக்கு சமாதானம் ஏற்படுவது என்பது சிலர் கூறுவது போல் ஒரு கனவாக இருக்கமுடியாது என மத்தியகிழக்கு சமாதான மாநாட்டை தொடக்கிவைத்துப்பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார்.

இதற்குச் சான்றாக உலக நாடுகளுக்கு இடையில்இருந்த முரண்பாடுகள் பல தற்



## இஸ்ரேல் பிடி தளரவில்லை

எதிர்பார்த்தது போலவே மாநாட்டில் இஸ்ரேல் தனது கொள்கையில் இருந்து சற்றேனும் இறங்கிவரவில்லை. மாநாட்டில் உரையாற்றிய இஸ்ரேலியப் பிரதமர் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் ஆக்கிரமித்தபகுதிகளை மீட்பதில் மட்டும் அரபு எதிரிகள் கவனம் செலுத்துவார்களேயானால் மாநாட்டில் எதவிதமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை எனத்தெரிவித்தார். இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு அங்கீகரிக்கப்பட்ட பகுதிகள் அத்தியாவசியமானவையாகும் அப்பகுதிகளை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற தொனி இஸ்ரேலிய பிரதமரின் பேச்சில் இருந்தது. இஸ்ரேல் பிரதமரின் இப்பேச்சு சமாதான மாநாட்டையே கேள்விக்குரியதாக்கியது.

> நாங்கள் சித்திரவதை செய்யப்படும் நாட்டில் இருந்து வந்திருக்கிறோம். சிறைப்பட்டிருக்கும் போதிலும் பெருமையுடைய மக்களாகவே வாழ்கிறோம். இன்று எமது நாட்டின் ஆக்கிரமிப்பாளர்களுடன்பேச்சுவார்த்தை நடத்தும் படி கேட்கப்பட்டுள்ளோம்.
>
> — பாலஸ்தீனப் பிரதிநிதி கைதர் அப்துல் அலி

## அமெரிக்காவிற்கும் திருப்தியில்லை

நடந்து முடிந்த இச் சமாதான மாநாடு தொடர்பாக அமெரிக்கா தனது முன்முயற்சியைக்கைவிடாவிடினும் எதிர்பார்த்த வெற்றியை அமெரிக்காவிற்கு மாநாடு கொடுக்கவில்லையென்றே தோன்றுகின்றது. மாநாட்டின் தொடர்ந்து வாய்ப்புக் கொடுக்கவில்லை

சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவர்கள் தமது பகைமையை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தனர். எடுத்துக்காட்டாக இறுதி நாள் நிகழ்ச்சியின்போது அமெரிக்க சோவியத் யூனியன் மேற்பார்வையாளர்கள் இல்லாத சமயத்தில் சிரிய வெளிநாட்

பது சிலர் கூறுவது போல ஒரு கனவாக இருக்கமுடியாது என மத்தியகிழக்கு சமாதான மாநாட்டை தொடக்கி வைத்துப்பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார்.

இதற்குச் சான்றாக உலக நாடுகளுக்கு இடையில்இருந்த முரண்பாடுகள் பல தற்பொழுது தீர்க்கப்பட்டுள்ளதை தமதுபேச்சிற்கு ஆதாரமாகவும் ஜோர்ஜ்புஷ் காட்டினார்.

## சமாதான மாநாடும் அமெரிக்காவும்

வளைகுடாப் போரின் முடிவோடு இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்ற முன்முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியது. அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் தொடர்ச்சியாகப் பயணங்களை மத்தியகிழக்கிற்கு மேற்கொண்டார். அரபு நாட்டுத் தலைவர்களுடனும் இஸ்ரேலுடனும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

உலகின் கெடுபிடி யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்தும் வளைகுடாவில்நிகழ்ந்த போரில் அரபு நாடுகள் மத்தியில் அமெரிக்காவிற்கு செல்வாக்கு அதிகரித்ததைத் தொடர்ந்தும் மத்தியகிழக்கு பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலை அமெரிக்காவிற்கு ஏற்படுத்தியது. மத்திய கிழக்கில் அரபுக்களின்செல்வாக்கை தொடர்ந்து அமெரிக்காபெற வேண்டுமானால் இது அமெரிக்காவிற்கு அவசியமாகியது அத்தோடு அமெரிக்காவின் சொல்லை சிரியா உள்ளிட்ட அரபுநாடுகள் ஓரளவேனும் கேட்கும் நிலையில் இருந்தன,

அதேவேளை பலஸ்தீன விடுதலை இயக்கம் வளைகுடாப்போரில் கடைப்பிடித்த கொள்கை காரணமாக பெரிதும்பாதிப்பிற்கு உள்ளாகியிரு



கியமாக விதித்தது. ஒன்று சமாதான மகாநாட்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கம்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக்கூடாது. இரண்டாவது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இருந்து (கிழக்குஜெருசலேம், காஸ மேற்குகரைப்பகுதிகள்) பாலஸ்தீனப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றக்கூடாது என்பதே அவசியமாகும்.

இஸ்ரேலின் இந்நிபந்தனைகள் சிறிது மாற்றங்களுக்கு உள்ளானதுடன்ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை. அதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலுள்ள பிரதிநிதிகள் ஜோர்டான் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து பேச்சுவார்த்தையில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர்.

இதில் பாலஸ்தீன விடுதலை இயக்க பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குபற்றகூடாது என்பது தனியாக இஸ்ரேலின் விருப்பம் மட்டுமல்ல. அமெரிக்காவின்விருப்பமும்கூட. வளைகுடாப்போரில் ஈராக்கிற்கு ஆதரவாகபாலஸ்தீன விடுதலை இயக்கம் செயற்பட்டதற்காக தண்டனையை வழங்குவதில் அமெரிக்காவும் அக்கறையாகவே இருந்தது.

மட்ரிட்டில் நடைபெற இருந்த சமாதான மா

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் அத்தியாவசியமானவையால் அப்பகுதிகளை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற தொனி இஸ்ரேலிய பிரதமரின் பேச்சில் இருந்தது. இஸ்ரேல் பிரதமரின் இப்பேச்சு சமாதான மாநாட்டையே கேள்விக்குரியதாக்கியது.

இஸ்ரேல் பிரதமரின் இப்பேச்சு அரபுகளுக்கு சினத்தை ஏற்படுத்தியதோடு மற்றும் சமாதான மாநாட்டில் எதுவித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை என்பதையும் உணர்த்தியது. இஸ்ரேலியப் பிரதமரின் இப்பேச்சுத் தொடர்பாக கருத்துவெளியிட்ட பாலஸ்தீனப் பிரதிநிதி ஒருவர் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை பற்றிப் பேசாவிட்டால் எதைப்பற்றி பேசுவது எனக் கேள்வி எழுப்பினர். சிரிய வெளிநாட்டமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் மட்றிட் சமாதான மாநாட்டில் இஸ்ரேல் விட்டுக்கொடுத்து சமாதானத்தை ஏற்படுத்தாவிடில், எதிர்காலத்தில் இதுபோன்றதொரு சந்தர்ப்பம் யூதர்களுக்குக்கிடைக்கப் போவதில்லை என்றார். ஜோர்தான் பிரதிநிதி பேசுகையில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டுஇணக்கம்காணப்படாவிடில் எதிர்காலத்தில் அது பேரழிவை ஏற்படுத்தும் என எச்சரித்தார்.

அதேவேளை அரபுக்கள் தமது தரப்பில் இருந்து சில கோரிக்கையை முன்வைத்தனர். ஐ.நா. தீர்மானத்திற்கு அமைய ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்திலிருந்து இஸ்ரேல்விலக வேண்டும் என்பது அவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது. அதேவேளை உடனடியாக ஆக்கிரமிக்கப்பட்ட

> ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களைப் பற்றிப்பேசாவிட்டால் வேறு எதைப்பற்றிப் பேசுவது.
> —பாலஸ்தீனப் பிரதிநிதி

### அமெரிக்காவிற்கும் திருப்தியில்லை

நடந்து முடிந்த இச் சமாதான மாநாடு தொடர்பாக அமெரிக்கா தனது முன்முயற்சியைக் கைவிடாவிடினும் எதிர்பார்த்த வெற்றியை அமெரிக்காவிற்கு மாநாடு கொடுக்கவில்லையென்றே தோன்றுகின்றது. மாநாட்டின் தொட

வில்லை.

சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அவர்கள் தமது பகைமையை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தனர். எடுத்துக்காட்டாக இறுதி நாள் நிகழ்ச்சியின்போது அமெரிக்க சோவியத் யூனியன் மேற்பார்வையாளர்கள் இல்லாத சமயத்தில் சிரிய வெளிநாட்

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் தனது என இஸ்ரேல் விவாதிக்கும் வரை அமெரிக்கா அதனை மறுக்காதவரை இதேபோல் எத்தனை சமாதான மாநாடு கூட்டப்படினும் மத்திய கிழக்கில் சமாதானம் பிறக்கப் போவதில்லை என்பது மட்டும் தெளிவு.

# இந்திய- சோவியத் ஒப்பந்தம் நிறைவேற்றுவது அவசியம்

**--- யெல்சின்**

(மொஸ்கோ)

இந்தியாவிற்கு ஆயுதங்களைச் சப்ளை செய்யும் இந்திய சோவியத் ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று ரஷ்ய குடியரசுத் தலைவர் பொரிஸ் யெல்சின் கூறியுள்ளார். இந்தியாவிற்கும்ஏனைய நாடுகளுக்கும் சப்ளை செய்யப்படும் ஆயுதங்கள் உலகச் சந்தை விலைக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் அணு ஆயுதங்கள் யாருக்கும் விற்கப்பட மாட்டாது என்பதையும் யெல்சின் தெளிவுபடுத்தியுள்ளார்.

# விசர்நாய்கள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

### இவ்வருடம் 12பேர் மரணம்

1991 ஆம் ஆண்டில் பன்னிரண்டு பேர் நீர் வெறுப்பு நோயினால் (விசர் நாய்க்கடியினால்) இறந்துள்ளார்கள் என்று யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் நகேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருடகாலமாக கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சுகாதாரப்பகுதியினர் நடவடிக்கையெடுத்து வந்த போதும், நாயினால் கடியுண்டோர் தொகை அதிகரித்து வருகின்றதென்றும்.

அதே நேரம் நாயினால் கடியுண்டோருக்குப் போடுவதற்குரிய தடைமருந்து ஏ.ஆர்.வி வைத்தியசாலைகளுக்கு வந்து சேருவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருவருக்கு இந்நோய் வருமானால் அவருக்கு மரணம் நிச்சயம் என்றும் மக்களை பாதுகாப்பாக இருக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாயினால் கடியுறுவதை தவிர்த்துக் கொள்ளும்படியும் கட்டாக்காலி நாய்களை அழிக்க சுகாதாரப்பகுதியினருக்கு உதவும் படியும், வளர்ப்பு நாய்களை கட்டி வைத்து வளர்க்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

## கருத்தரங்கு

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் ஒன்று நாளை 04-11-91 திங்கட்கிழமை 2.00மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

## பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம்

ஐம்பதினாயிரம்எலுமிச்சை மரக்கன்றுகளும் ஆயிரக்கணக்கான அத்தி, பலா, நெல்லி ஆகிய மரக்கன்றுகளும் தமிழீழ ஆய்வு நிறுவனம் விநியோகம் செய்யவுள்ளது.

தேவைப்படுவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன்தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

## கணவரை விடுவிக்கமனு

(அக்கரைப்பற்று)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதி அக்கரைப்பற்றில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தற்போது மாஸின் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இளையதம்பி தர்மலிங்கம் (36) என்பவரின் விடுதலை வேண்டி அவரது மனைவி ராசாமணி தனது சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஊடாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளார்.

## க. பொ. த. (சா.)ப. 1991 புதிய நேர சூசிகை

முன்னோடிப் பரீட்சை க. பொ. த. (சா )ப 1991 புதிய நேர சூசிகை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 06-11-91 | சமூகக்கல்வியும் | i | 08·00 - 09·00 |
| | வரலாறும் | ii | 09 30 - 12·30 |
| 07-11-91 | ஆங்கிலம் | i | 08 00 - 10 00 |
| | | ii | 10 30 - 12·30 |
| 08-11-91 | சமயம் | i | 08 00 - 09 00 |
| | | ii | 09 30 - 11·30 |
| 09-11-91 | மொழியும் | i | 08 00 - 08 45 |
| | இலக்கியமும் | ii | 09 00 - 11 00 |
| | | iii | 11 30 - 01·30 |
| 11-11-91 | விஞ்ஞானம் | i | 08 00 - 09 00 |
| | | ii | 09 30 - 12·30 |
| 12-11-91 | கணிதம் | i | 08·00 - 09·00 |
| | | ii | 09 30 - 12·30 |
| 13-11-91 | அழகியற்பாடங்கள் | i | 08 00 - 09 00 |
| | சித்திரம் | ii | 09 15 - 11 15 |
| | சித்திரம் | iii | 11 30 - 01·30 |
| 14-11-91 | தொழில்நுட்பப்பாடம் | i | 08 00 - 09 00 |
| | | ii | 09 30 - 12 30 |
| | வர்த்தகமும் | i ) | |
| | கணக்கியலும் | ii ) | 09·30 - 12 30 |

## வங்கியாளருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரிவிலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, காங்கேசன்துறை ஆகியஇடங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை மாலை 3·00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடல் நிகழ்வில் வங்கியாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# உள்ளதை எல்லோரும் பகிர்வதே உணவுப் பங்கீட்டின் நோக்கம்

உணவுப் பங்கீட்டுத்திட்டத்தின் நோக்கம், உள்ளதை எல்லோருடனும் பகிர்ந்து உபயோகிப்பதாகும். எவரையும் தன்புறுத்தவோ அல்லது எவருக்கும் அதிக நன்மைகளை வழங்கவோ அல்ல. போர்க் காலங்களில் கூட்டுறவுத்துறை மூலம் பொருள்களை விநியோகிப்பது, நியாயமான விநியோகத்தை உறுதிசெய்யக்கூடியது என்பது இரண்டாம் உலகப் போரின் காலத்திலிருந்தே அனைவரும் அறிந்தகொண்ட ஒன்றாகும். இவ்வாறு பாவனையாளர் குழு விடுத்த செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது.

இதில் மேலும் விபரிக்கப்படுகையில் இதன் அடிப்படையில் தற்பொழுது சில அத்தியாவசியப் பொருள்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கையையும் தொகையையும் நாளடைவில் கூட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

ஆனால் நமது பிரதேசம் இன்றுள்ள நிலையில் இவ்விநியோகத்தை முறையாகச் செய்ய தனியார் துறையினதும் ஒத்துழைப்புத் தேவை. தனியார் துறையினரும் தங்களிடமுள்ள பொருள்களை நியாயமான விலையை நிர்ணயித்து அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாகப் பங்கீட்டு முறையில் விற்பனை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அத்துடன் பாவனையாளர் குழுக்களின் முழு நோக்கமும் கிடைக்கக் கூடிய பொருள்களை பகிர்ந்தளிப்பதே என்றும் உணவுப் பற்றாக்குறை காரணமாக பட்டினிச் சாவுகள் தோன்றுவதையோ, அல்லது விநியோகக் கட்டுப்பாடு இல்லையால் தட்டுப்பாடு ஏற்படுவதையோ தடுக்க வேண்டியது முழுச் சமூகத்தையும் சேர்ந்த ஒரு சமூகக் கடமை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வகட்சி மாநாட்டில் மேற்சபை பற்றி ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் மேல் சபை ஒன்றை ஏற்படுத்த கொழும்பில் இரு நாட்கள் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் ஆராயப் பட்டதாக அரசியல் கட்சி வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

கடந்தசெவ்வாயன்று நடைபெற்ற மாநாட்டில் இந்த யோசனை குறித்து ஆராயப் பட்டதாகவும் தெரியவருகிறது.

கூட்டத்தில் லிபரல் கட்சி இந்தப் புதிய யோசனையை முன் வைத்துப் பேச்சைத் தொடக்கியது.

லிபரல் கட்சியின் இந்த ஆலோசனைக்கு பல கட்சிகள் மாநாட்டில் எதிர்ப்புத் தெரிவித்தன என்றுதெரியவருகிறது.

## மண்டைதீவில் இராணுவம் 3000 கடற் தொழிலாளர்கள் பாதிப்பு

(குருநகர்)

"மண்டைதீவு, கல்முனை போன்ற கரையோரங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளதால் கடல் சார்ந்த எவ்வித தொழிலையும் செய்ய முடியாமல் தடுத்துப் பூட்டப்பட்டுள்ளோம். இதன் காரணமாகக் குருநகரில் வாழும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன"

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் இம்மாதம் 1-ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றில் யாழ். அரசாங்க அதிபருக்கு மேற்கண்டவிதமாகத் தெரிவித்துள்ளது.

கடந்தகாலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக எமது மக்கள் பல்வேறுபட்ட துன்ப துயரங்களை அனுபவித்து வந்துள்ளார்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

எனவே எமது மக்களின் துயர் துடைக்க எமக்கு ஏதாவது வகையில் உதவும் வண்ணம் மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்"

இவ்வாறு யாழ். அரசஅதிபருக்கு குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (21)

## மீனவர் மீது தாக்குதல் ஒருவர் பலி; ஒருவர் காயம்

(பருத்தித்துறை)

கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு பருத்தித்துறை கடலில் சிறிலங்கா கடற்படை தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த லோகக்குட்டி (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

அவருடன் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த அமரன் (வயது 17) காயங்களுடன் நீந்தி வந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவரின் உடலமும், தொழிலுக்குச் சென்ற இயந்திரப் படகும் நேற்று வரையில் கரை ஒதுங்கவில்லை என்றும் தெரிய வருகிறது. (21)

## இலங்கையில் 800 எயிட்ஸ் கிருமிகாவிகள் உள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் 800 எயிட்ஸ் வைரஸ் கிருமி காவிகள் உள்ளனர். எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய துரித நடவடிக்கை எடுக்கப்படாவிடில், 20 வருட காலத்தில் 10 லட்சம் பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்படுவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஏனைய நாடுகளின் அனுபவங்களை இலங்கை அறிந்து கொள்ளவேண்டும். தற்பொழுதிலிருந்து நாங்கள் துரிதமாகச் செயல்படவேண்டும் என்று கொழும்பில் பொது வைத்தியர் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்

மாவீரர்கள் ஆவர்.

இந்த மண்ணிற்காக மரணித்த இந்த மாவீரர் நாளில் மக்களாகிய நாம் புதிய தீர்மானங்களை மனங்களில் ஏற்படுத்திக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும். மண்ணின் விடுதலைக்காகத் தமது சொந்த ஆசைகளையெல்லாம்

## கலிபர் தாக்குதல்

(நமது நிருபர்)

சுன்னாகம் பட்டினப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி கலிபர் தாக்குதலை நடத்தியது.

மேலும் நேற்று நண்பகலவில் அராலிப் பகுதியிலும் கலிபர் தாக்குதல்களை சிறிலங்கா விமானப் படையின்

## இராணுவத்தால் கைது

திருமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் கணேசன் சிவாகரன் என்ற இளைஞனைக் கைது செய்தனர்.

கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞன் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை

★ ★ ★

மூதூர் மாவட்டத்திலுள்ள மணல்சேனை என்னும் இடத்தில் வைத்து கடந்த 30 ஆம் திகதி கந்தசாமி ஜெயசங்கர் (வயது 19) என்ற இளைஞர்,

## சிங்கள பெண்ணை மீட்பதில் பிரிட்டன் அசிரத்தை

(கொழும்பு)

சிரியாவில் அரேபிய வீடொன்றில் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறிலங்காப் பணிப்பெண்ணை மீட்க உதவும் பணியில் பிரித்தானிய அரசு பாராமுகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் தூதராலயம் சிரியாவில் இல்லை ஆதலால் கொழும்பு வெளிவிவகார அமைச்சு பிரித்தானிய வெளியுறவு அலுவலகத்தின் உதவியை நாடியுள்ளது.

வளைகுடாப் போரின் போது சிரியாவிற்கு இடம்பெயர்ந்த அரேபியக் குடும்பமொன்றில் குலதுங்கவெனித்த என்ற இந்தச் சிங்களப்பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

பொதுநலவாய அமைப்பின் தலைமை நாடென்ற வகையில் முன்னதாகப் பல சந்தர்ப்பங்களில் இவ்வகையான சூழ்நிலைகளில் உதவிய பிரித்தானிய அரசு இப்போது மௌனம் சாதிப்பது கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது

இவர் வன்முறைகளுக்கு உள்

னர். எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய துரித நடவடிக்கை எடுக்கப்படாவிடின், 30 வருட காலத்தில் 10 லட்சம் பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்படுவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஏனைய நாடுகளின் அனுபவங்களை இலங்கை அறிந்து

---

யாழ்.பல்கலைக்கழகம்

பௌதிக விஞ்ஞான பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான தூயகணிதம்

[PMG 32] பரீட்சை பிற்போடல்

மேற் கூறப்பட்ட பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டது போல் 6-11-1991 ம் திகதி நடைபெறாது என்பதையும் இப்பரீட்சை 11-11-1991 ஆம் திகதி மு.ப 9 00 மணிக்கு கணித பிரிவு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் மூன்றாம் வருட பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கு அறியத்தருகிறேன், 11-11-1991 ல் நடைபெற இருக்கும் BG 19, CS 08, ZS 05, PS 06, MS 09, STS 05 பாடங்கள் இரசாயனவியல் விரிவுரை மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது எனவும் அறியத்தருகிறேன்.

பதிவாளர்

(B/3427)

---

என்று கொழும்பில் பொது வைத்தியர் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்

மாவீரர்கள் ஆவர்.

இந்த மண்ணிற்காக மரணித்த இந்த மாவீரர் நாளில் மக்களாகிய நாம் புதிய தீர்மானங்களை மனங்களில் ஏற்படுத்திக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும். மண்ணின் விடுதலைக்காகத் தமது சொந்த ஆசைகளையெல்லாம் துறந்த மாவீரர்களின் தியாகங்களை மனப்பூர்வமாக நினைவு கூர்ந்து மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் ஏதோவொருவகையில் பங்களிப்பு நல்க திடசங்கற்பம் பூணுதல் நல்லதொரு தீர்மானமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

யாழ். அரச

சிப் பகுதியிலுள்ள உதவி அரசாங்கஅதிபர்களை சரகெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இன்று பிற்பகல் நான்கு மணிக்கும் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

ஐ. தே. கட்சி

எது இதன் செயற்பாட்டின் போது அதிகார துஷ்பிரயோகங்கள், முரண்பாடுகள் தோன்றும் போது அதனைச் சீர்திருத்தக் கோரி கிளர்ச்சி செய்யக் கூடாதென்வோ நாம் தடுக்கப்படவில்லை என்று ஐ தே க. அதிருப்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுப்றீம் கோட்டில் ஐ.தே க. தாக்கல் செய்த எதிர்ப்பு மனுவுக்குப் பதிலாக அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா உள்ளிட்ட எட்டுப்பேரும் தாக்கல் செய்தபதில் மனுவிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இம் மனுவில் மேலும் ஐ.தே.க. தம்மை வேட்பாளர்களாக நியமித்த காரணத்தால் அல்லது முக்கியமாக தாம் ஐ.தே.க.வில் போட்டியிட்ட காரணத்தால் தான் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும் மறுத்துள்ளனர்.

---

## கலிபர் தாக்குதல்

(நமது நிருபர்)

கல்...யில் நேற்று முன்தினம் மாலை சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி கலிபர் தாக்குதலை நடத்தியது.

மேலும் நேற்று நண்பகலவில் அராலிப் பகுதியிலும் கலிபர் தாக்குதல்களை சிறிலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்தி நடத்தியுள்ளது

---

ஆட்சியைப்

ரல் சிசில் வைத்திய ரெத்தினா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரின் நியமனத்தால் அதிருப்தியானருக்கு சார்பாக இருந்த ஜெனரல் கொப்பேகடுவா தடுக்கப்பட்டிருக்கிறார். இது ஒரு வகையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் கையைப் பலப்படுத்தியிருப்பதாக கருதப்படுகிறது.

---

இசையருவி

தலைமை தாங்குவார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வெளியிட்டு வைக்கும் இந்த ஒலிப் பதிவு நாடா திரு வி. கே. பஞ்சமூர்த்தி அவர்களின் உருவாக்கமாகும்.

இவ்வைபவத்தில் திரு.தேவர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, ஒலிப்பதிவில் பங்கேற்ற கலைஞர்களுக்கு விடுதலைப் புலிகளின் யாழ். பிராந்திய சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச் செல்வன் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு யோகரத்னம் யோகி, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா மற்றும் வண பிதா. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார், திரு ந. வீரமணிஐயர் திரு. என். கே பத்மநாதன், திரு. பொன் சுந்தரலிங்கம், நவாலியூர் க. சச்சிதானந்தன், திரு.இ. ஜெயராஜ் ஆகியோர் கலந்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

---

இராணுவத்தினர் கணேசன் சிவாகரன் என்ற இளைஞனைக் கைது செய்தனர். செய்யப்பட்ட ... ஞன் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை.

★ ★ ★

மூதூர் மாவட்டத்திலுள்ள மணல்சேனை என்னும் இடத்தில் வைத்து கடந்த 30 ஆம் திகதி கந்தசாமி ஜெயசங்கர் (வயது 19) என்ற இளைஞர் சிறிலங்கா இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார்.

மல்லிகைத் தீவைச் சேர்ந்த மேற்படி இளைஞர் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை.

★ ★ ★

வடபகுதிக்கு 21,731 ரோச் பற்றறிகளையும், 250 கலன் பெற்றோலையும் கடத்திய இருவரைக் கடந்த செவ்வாயன்று நீர் கொழும்புச் சுங்கப் பகுதியினர் கைது செய்தனர்.

கடத்தல்காரர்களில் ஒருவர் சிலாபத்தைச் சேர்ந்தவர் மற்றவர் நீர்கொழும்பு வாசியாவர்

---

1990இல்

நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளை எதிர்வரும் இருபத்திரண்டாம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள கூட்டத்திற்குச் சமுகமளிக்கவேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளது.

பரீட்சைப்பகுதியின்செய்திக் குறிப்பொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

---

''யுக்திய''

கமும் சீலிடப்பட்டன. பின்னர் தாகப் 18 ஆம்திகதி ஊழியர் இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸார் காவலில் இருந்தபோதே சில உடைக்கப்பட்டு இயந்திர சாதனங்கள் சேதமாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைதான ஊழியர் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்யுமாறு பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

---

வைக்கப்பட்டிருக்கும் சிறிலங்காப் பணிப்பெண்ணை மீட்க உதவும் பணியில் பிரித்தானிய சிறிலங்காவின் தூதராலயம் செயலின் இல்லை அதனால் கொழும்பு வெளிவிவகார அமைச்சு பிரித்தானிய வெளியுறவு அலுவலகத்தின் உதவியை நாடியுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் தலைமை நாடென்ற வகையில் பிரித்தானியாவின் உதவியை சிறிலங்கா நாடியுள்

குற்றங்களை ... உதவிய பிரித்தானிய அரசு இப்போது மௌனம் சாதிப்பது கொழும்பில் ...

வளைகுடாப் போரின் போது ... இடம் பெயர்ந்த ஆசியக் குடும்பமொன்றில் குழுவெளிக்க என்ற இந்தச் சிங்களப்பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் இவர் வதைமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# 150வது நாளை நினைவு

கூருகின்றோம்



தாயின் மடியில்
1969-02-28

தாயகமண்ணில்
1991-06-14

வவுனியா பூவரசங்குளத்தில் நேரடிமோதலில் வீரமரணமடைந்த

## 2ஆம் லெப்டினன்ட் அருணா

[சின்னையா நவமணி]

அருணாவே!
பாரினின் புகழ்வேண்டி
பாதை ஒன்று வகுத்து சென்றாய் - தமிழ்
ஈழத்தின் விடிவிற்காய்
ஈந்து நின்றாய் நின் உயிரை
அவனியிலே நீ மறைந்து
ஆனதம்மா ஐந்து திங்கள்
ஆறிடுமா உன் நினைவு
ஆத்மா சாந்தி பெற

குடும்பத்தினர்

புனோலி தெற்கு.
புலோலி

(B/3407)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி.31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.